**<u>Sub Court, Eraniel</u>**

**O.S. No.132/2023**

Date: 10.11.2025.

வா.சா.1 - திரு. கிருஷ்ணமணி

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு எண்.132/2023. நான் தற்போது உடையார் பள்ளத்தில் குடிவசிக்கிறேன். நான் 7 ம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியும். எனது வீட்டில் கணிணி அல்லது தட்டச்சு இயந்திரம் இல்லை. தற்போது நான் நிலபுரோக்கர் மற்றும் பழைய வண்டி வாங்கி விற்கும் தொழில் செய்துவருகிறேன். நான் அடிக்கடி நீதிமன்றத்தில் வந்து சாட்சி சொல்வது வழக்கம் என்றால், சரியல்ல. என் மீது இந்த நீதிமன்றத்தில் 2 வழக்குகள் நிலுவையில் உள்ளன. வேறு நீதிமன்றத்தில் எனக்கு வழக்குகள் கிடையாது. இரணியல் குற்றவியல் நீதிமன்றத்தில் STC No.5/2021 என்ற வழக்கில் நான் தண்டனை பெற்றேன் என்றால், சரியல்ல. என் மீது பல்வேறு காவல் நிலையங்களில் புகார்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்றால், சரியல்ல. என் மீது பல்வேறு நீதிமன்றங்களில் காசோலை வழக்குகள் நிலுவையில் உள்ளன என்றால், சரியல்ல. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தினை நான் சொல்லி வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதியை எனக்கு 2019 முதல் தெரியும். பிரதிவாதியை அவருடைய அக்காவின் கணவர் ராஜப்பன் மூலமாக தெரியும். பிரதிவாதி சேரமங்கலத்தில் வாடகை வீட்டில் குடியிருந்தார் அப்போது முதல் தெரியும். அந்த வீட்டின் கதவு எண் நினைவில் இல்லை. பிரதிவாதி ஹோட்டலில் வேலை பார்ப்பதாக ராஜப்பன் சொன்னார். எனக்கு நேரடியாக தெரியாது. பிரதிவாதிக்கு

திருமணம் ஆகவில்லை. பிரதிவாதி என்னிடம் இந்த ஒருமுறை தான் கடன் வாங்கினார். குருந்தன்கோடு ஊரை சார்ந்த பொனுமணிராஜனை எனக்கு தெரியாது. பொன்னுமணி ராஜன் கட்டிட ஒப்பந்த வேலை செய்கிறார் என்றால், எனக்கு தெரியாது. பொன்னுமணி ராஜன் , பிரதிவாதியின் வீட்டில் வேலை செய்துவந்தார் என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. பொன்னுமணி ராஜன் பிரதிவாதியிடமிருந்து ரூ.31 லட்சம் பணம் பெற்றுகொண்டு வீடு கட்டாமல் சென்றுவிட்டார் என்றால், அதுவிபரம் எனக்கு தெரியாது. இது சம்பந்தமாக மண்டைகாடு காவல் நிலையத்தில் புகார் கொடுத்து விசாரணை செய்த விபரம் எனக்கு தெரியாது. எனக்கு வங்கி கணக்கு உண்டு என்றால், சரிதான். நான் வருமான வரி செலுத்துவதில்லை . எனது மாதவருமானம் 1 முதல் 3 லட்சம் கூட வரும், சில மாதங்கள் வருமானமே வராது. பிரதிவாதி என்னிடம் எந்த தேதியில் கடன் கேட்டார் என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. கடன் கொடுப்பதற்கு 1 வாரத்திற்கு முன்பு குளச்சல் பெருமாள் கோவிலில் வைத்து கடன் கேட்டார். அந்த சமயத்தில் அவருடன் ராஜப்பன் இருந்தார். அதன் பின்னர் 10.01.2022 ல் நான் கடன் கொடுத்தேன். அந்த பணத்தை நான் வங்கியில் இருந்து எடுக்கவில்லை. எனது பணம் rotation ல் இருந்து எடுத்தேன். பணத்தை காலை 11.30 மணியளவில் கொடுத்தேன். பணம் கொடுக்கும்போது நானும் , எனது மனைவி, ராஜப்பன், ராஜப்பன் மனைவி ராஜி, மற்றும் வாதி ராஜேந்திரன், மற்றும் சாட்சிகள் இருவர் ஒரு சாட்சியின் பெயர் தீபக் ஜான் மற்றும் ஜெயசேகர் ஆகீயோர் இருந்தார்கள். 500 ரூபாய் நோட்டு 10 கட்டுகள் ராஜேந்திரனுக்கும், 10 கட்டுகள் ராஜிக்கும் கொடுத்தேன். மொத்தமாக 10 லட்சம் ரூபாய் கொடுத்தேன். பிராமிசரி நோட்டை எழுதியது

பிரதிவாதிதான். பிரதிவாதி எந்த கலர் மையில் கையொப்பம் செய்தார் என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. சாட்சிகள் முகவரி மற்றும் கையொப்பம் எந்த கலர் மையில் செய்தார்கள் என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. பிரதிவாதி பிராமிசரி நோட்டில் கைரேகை வைக்கவில்லை. சாட்சிகளின் கையொப்பம் ஆங்கிலத்தில் செய்யப்பட்டதா என்றால், 2 வது கையொப்பம் ஆங்கிலத்தில் செய்தார். பிராமிசரி நோட்டில் உள்ள சாட்சிகளின் முகவரி ஆங்கிலத்தில் உள்ளதா என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. பிரதிவாதி ஒரு கையொப்பம் செய்தார். அவர் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தார். சாட்சிகளின் முகவரி , ஜெயசேகரன் , புன்னங்காடு, வில்பிரட் ஜான் , பிலாவிளை. அந்த தேதியில் என்னிடம் ரூ,10 லட்சம் இருந்ததை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்ய இயலாது. வருமான வரி சட்டத்தின் படி ரூ.20,000/–ற்கு மேல் பணத்தைரொக்கமாக கடன் கொடுக்ககூடாது என்ற விபரம் எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் எனது மாதவருமானம் பற்றிய ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலாது. கடன் தொகையை நான் எந்த தேதியில் திருப்பி கேட்டேன் என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் உண்மையில் பணம் கொடுக்காத காரணத்தினால் தான் அவ்வாறு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கில் நான் எத்தனை ஆவணங்கள் தாக்கனல் செய்திருக்கிறேன் என்ற விபரம் எனக்கு நினைவில் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரதிவாதியின் செட்டில் மென்டு ஆவணத்தில் உள்ள சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. அந்த சொத்து பிலாவிளை கிராமதிற்கு உட்பட்டது. அந்த சொத்து 5 சென்டு இடம். அது காலி மனை இல்லை, வீடு உள்ளது. அந்த

ஆவணத்தை என்னிடம் ராஜப்பன் கொடுத்தார். நான் பிரதிவாதிக்கு 16.10.2023 ல் அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன். அதற்கு வந்த பதில் அறிவிப்பை எனது வழக்கறிஞர் பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பினார் என்றால், சரியல்ல. அவ்வாறு நான் தவறுதலாக குறிப்பிடுகிறேன் என்றால், சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ–1 பிராமிசரி நோட்டில் உள்ள கையொப்பமும், வா.சா.ஆ–4 ல் அஞ்சல் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பமும் வேறுபட்டுள்ளது என்றால், சரியல்ல. இந்த வழக்கில், பிரதிவாதி தனது கையொப்பத்தை கையெழுத்து நிபுனர் ஒப்பீடு செய்வதற்கு மனு தாக்கல் செய்ததற்கு நான் ஆட்சேபனை தெரிவித்தேன் என்றாலும், அதனால் அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்ற விபரங்கள் எனக்கு தெரியும். மேற்படி கையொப்பங்களை நீதிமன்றத்தில் ஒப்பீடு செய்து பார்ப்பதற்கு எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. பிரதிவாதி என்னிடம் பணம் ஏதும் வாங்கவில்லை என்றாலும், அவருக்கு என்னை நீதிமன்றத்திற்கு வந்த பிறகு தான் தெரியும் என்றாலும், சரியல்ல. நான் பணம் கடன் கொடுத்ததாக சொல்லும் தேதியில் பிரதிவாதி என் வீட்டிற்கு வரவும் இல்லை , கையொப்பமும் செய்யவில்லை என்றால், சரியல்ல. நான் இந்த வழக்கை எனது நண்பர் பொன்னுமணி ராஜ்ற்காக தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.